2. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) மாமன்ற நிகழ்ச்சிகளை காவல் துறையினர் கண்காணித்தல்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய மரியாதையையும் கண்ணியத்தையும் பாதிக்கின்ற ஒரு வேதனைக்குரிய நிகழச்சியை உங்கள் கவனத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மாமன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம். இதுதான் தலையான அதிகாரம் படைத்த மாமன்றம். இந்த மா மன்றத்திலே காவல் துறையினர் வந்து வேவு பார்க்கும் நிகழ்ச்சி பற்றி கடந்த 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாளன்று சூப்பரின்டென்டென்ட் ஆப் போலீசால் கையெழுத்திடப்பட்டு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி வேறு பல உறுப்பினர்கள் காலையில் வந்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவை யாவும் பரிசீலனையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நோட்டீஸ் கொடுத்திருந்தால் அதுவும் சேர்த்து பரிசீலிக்கப்படும். இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற வகையில் அந்தப் பிரச்சினையை எழுப்புவது மற்ற உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகும்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். மேலே பார்க்க வருகிற பார்வையாளர்கள் இந்த நாட்டு மக்கள். மேலே வலை கட்டப்பட்டு உள்ளே நுழைவதே கஷ்டமாக இருக்கிறது. கஸ்டம்சில் இருப்பதை விடக் கடுமையாக இருக்கிறது. ஓட்டுப் போட்ட அந்த மக்களை வலை கட்டி உட்கார வைப்பது சரி தானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வலை கட்டப்பட்டு வலைக்குள்ளே வசதியாகத்தான் உட்கார வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்பது நீக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.